## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

## ஹஜ், உம்ராவில் விடப்படும் கொள்கைத் தவறுகள்

1. அல்லாஹ்வால் மாத்திரம் முடியுமான ஒரு காரியத்தை அவனல்லாதோரிடத்தில் பொறுப்புச் சாட்டுதல். உதவி, உணவு, பரிந்துரை போன்ற தமது தேவைகளை மரணித்தோர், சிலைகளிடத்தில் பொறுப்புச்சாட்டுவோரை உதாரணமாகக் கொள்ளலாம். இவை பெரிய இணைவைப்பாகும்.

2. முகஸ்துதிக்காகவும் புகழுக்காகவும் ஹஜ், உம்ராச் செய்தல். இந்த முகஸ்துதி, புகழ் ஆகியவற்றை நபியவர்கள் எச்சரித்துள்ளார்கள். ‘யார் பிரபல்யத்திற்காக ஒன்றைச் செய்கிறாரோ அவரை அல்லாஹ் கேவலப்பத்துகின்றான். மேலும் யார் முகஸ்துதிக்காக ஒன்றைச் செய்கின்றாரோ அவரையும் அல்லாஹ் (மறுமையில்) கேவலப்படுத்துவான்’ என்று நபியவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

3. சூனியம், பொறாமை, கண்ணூறு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற தாயத்து, மணிகள், நூற்கள் போன்றவற்றை ஹஜ் மற்றும் உம்ராவிற்கு வரும் சிலர் கட்டிக் கொண்டுவருதல். இவற்றால் நேரடியாக எவ்விதப் பயனோ, தாக்கமோ செலுத்த முடியாது என்று அறிந்த நிலையில் இதனைக் கட்டுவது சிறிய இணைவைப்பாகும். அதுவே, நேரடியாகத் தாக்கம் செலுத்தும், நலவைக் கொண்டுவரும், கெடுதியைத் தடுக்கும் என்று நம்பிக்கை கொண்ட நிலையில் இவற்றைக் கட்டினால் அது பெரிய இணைவைப்பாகும்.

4. ஹஜ், உம்ராவிற்கு வரும் சிலர் அல்லாஹ் அல்லாதோரை அழைத்துப் பிரார்த்திப்பதும், அவர்களிடத்தில் பாதுகாப்புத் தேடுவதும், இணைவைப்பு இடம்பெற்றுள்ள நாளாந்தப் பிரார்த்தனைகளை நம்பியிருத்தல் போன்றன. நோய் நிவாரணி, அருட்கொடைகளில் விஸ்தீரணம், துன்பங்களிலிருந்து விடிவு போன்ற நலவை ஏற்படுத்தி கெடுதியைத் தடுக்கும்படி அல்லாஹ்விடமன்றி வேறு யாரிடமும் கேட்பதாகாது. யார் அவற்றை அல்லாஹ் அல்லாதோரிடம் கேட்கின்றாரோ அவன் அவர்களை அவனுடன் சேர்த்து இணைகற்பித்து விட்டான். இறைவன் கூறுகின்றான் : உமக்கு (எவ்வித) நன்மையையோ, தீமையையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாததை எதனையும் நீர் பிரார்த்திக்க வேண்டாம் ' (அவ்வாறு) செய்வீராயின் நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராகிவிடுவீர். (யூனுஸ் : 106).

5. புனித க.ஃபாவின் திரை அல்லது அதன் வெளிப்பகுதிச் சுவரைத் தொட்டு பரகத் தேடல். அதேபோன்று நபியைப் பின்பற்றும் நோக்கமல்லாமல் பரகத் தேடும் நோக்கில் ஹஜருல் அஸ்வத் கல் மற்றும் ருக்னுல் யமானீ முனையைத் தொடுதலும் இதில் அடங்கும். இப்புனித க.ஃபாவானது அல்லாஹ்வுடைய மாளிகை, இவ்வுலகிலேயே கண்ணியமிக்க மாளிகை என்பதில் அனுவளவும் ஐயமில்லை. அதனைக் கட்டிய நாளிலிருந்தே அல்லாஹ் அதனை கண்ணியப்படுத்தி சிறப்பாக்கித்தான் வைத்துள்ளான். எனினும் நாம் ஒன்றை நேசிக்கும் போது அதில் அளவு கடந்து போகாமலும், குறைவைக்காமலும் இருக்க அதனை நாம் அல்குர்ஆன் ஹதீஸுடன் வரையறுத்துக்கொள்வது அவசியமாகும். இதனால்தான் உமர் (ரலி) அவர்கள் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடும் போது அதனைப் பார்த்துப்

பின்வருமாறு கூறினார்கள் : எந்த நலவோ தீங்கோ ஒன்றுமே செய்ய முடியாத கல்தான் நீ என்பது எனக்குத் தொரியும். நபி (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிடுவதைக் கண்டிராவிடின் நானும் உன்னை முத்தமிட்டிருக்கமாட்டேன். (புஹாரி, முஸ்லிம்).

6. மகாமு இப்ராஹீமை வைத்து பரகத் தேடுதல் மற்றும் அதனைப் (வணக்க அடிப்படையில்) ஒரு ஹாஜி பார்த்துக் கொண்டே இருத்தல். அவ்விடத்தில் தொழுகை மாத்திரமே மார்க்கத்தில் காட்டித்தரப்பட்டுள்ளது. இறைவன் கூறுகிறான் : இப்ராஹீம் நின்ற இடத்தை - மகாமு இப்ராஹீமை - தொழும் இடமாக நீங்கள் ஆக்கிக்கொள்ளுங்கள். (அல் பகரா : 125). எனவே அதனைத் தொடுவது கூடாது.

7. ஹிரா மற்றும் ஸௌர் குகைகளைத் தரிசிப்பதும் அதில் ஏறுவதில் சிரத்தை எடுத்துக் கொள்வதும். ஏனைய குகைகளை விட இவ்விரண்டிற்கும் தனிச்சிறப்பு இருப்பதாக எவ்விதச் சான்றுமில்லை.

8. அரபா மலைக்கு ஏறுவதில் சிரத்தை எடுத்துக்கொள்ளல். ஹாஜிகளுக்கு மத்தியில் இம்மலைக்குத் தனியிடமுண்டு. இதனால்தான் அரபா தினத்தின் சிரமப்பட்டு ஏறமுற்படுகின்றனர். இது எவ்வித ஆதரமுமற்ற முயற்சியாகும். “உங்களுடைய (ஹஜ்) வணக்கங்களை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்”. என்று நபியவர்கள் கூறினார்கள். அதே நபியவர்கள் எனைய மலைகளைக்கான இம்மலைக்கு எவ்விதத் தனிச்சிறப்பையும் வைக்கவில்லை.

9. மக்காவிலுள்ள மரங்கள் மற்றும் கற்களை வைத்து பரகத் தேடுதல். அவற்றை தமது சொந்த ஊருக்குக் கொண்டு செல்லல். மக்காவானது இப்பூமியிலுள்ள மிகப் பரிசுத்தமான ஓர் இடம்.

அதிலே அல்லாஹ்வின் மாளிகை புனித க.ஃபா உள்ளது. மேலும் எமது தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் பிரார்த்தனையின் மூலம் இது அபயமளிக்கப்பட்ட பூமியாக்கப்பட்டுள்ளது. அதன் மணலுக்குத் தனித்துவம் இருப்பதாக எவ்வித ஆதாரங்களும் வரவில்லை. அதே போன்றுதான் அதன் கற்கள் மற்றும் அங்குள்ள மலைகள். ஹதீஸில் இடம்பெற்றிருப்பது அதன் மரங்கள், வேட்டைப் பிராணிகள், அங்கு தவறவிடப்பட்ட பொருட்கள் புனிதமானது (இன்னொருவருக்கு இம்மூன்றும் சொந்தமாக மாட்டாது) என்பதுதான். அவ்வாறிருந்தும் கூட நபியவர்களோ தோழர்களோ அதன் மரங்களை வைத்து பரகத் தேடாததால் எங்களுக்கும் அவ்வாறு முடியாது.

10. ஹஜ், உம்ராவுடன் மதீனாவைத் தரிசிப்பதையும் தொடர்புபடுத்தல். அவ்விரண்டிற்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதே வலுவான கருத்தாகும். எனினும் அவ்விரண்டிற்குமிடையில் தொடர்பிருப்பதாகக் கருதாமல் மதீனாவைத் தரிசிக்கச் செல்வது விரும்பத்தக்கது.

11. நபியவர்களின் சமாதியைத் தரிசிக்கும் நோக்கில் பிரயாணம் மேற்கொள்ளல். நபியவர்களின் பின்வரும் கூற்றிற்கமைய இது கூடாதது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (வணக்கம் என்ற அடிப்படையில்) மூன்று பள்ளிகளைத் தவிர பிரயாணம் மேற்கொள்ளப்படலாகாது. (மக்காவிலுள்ள) அல்மஸ்ஜிதுல் ஹராம், (பலஸ்தீனிலுள்ள) அல்மஸ்ஜிதுல் அக்ஸா, (மதீனாவிலுள்ள) என்னுடைய இந்தப் பள்ளி (மஸ்ஜிதுந்நபவீ). நபியவர்களின் சமாதியைத் தரிசிப்பதென்பது நல்லமல்களில் ஒன்று என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அதனைத் தடுப்பது எப்படிப்போனாலும் அது வணக்கம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனினும் தடை செய்யப்பட்டது எதுவென்றால்

அதற்காகவென்றே பிரயாணம் மேற்கொள்வதுதான். நபியவர்களின் சமாதியைத் தரிசிப்பது பற்றி வந்துள்ள அனைத்து நபிமொழிகளும் பொய்யானவையே. அவற்றில் எந்தவொன்றும் நபியவர்களிடமிருந்து ஸஹீஹாஹ வரவில்லை. மதீனாவிற்கு வெளியிலுள்ள ஒருவர் நபியவர்களின் சமாதியைத் தரிசிக்க விரும்பினால் அவர் மஸ்ஜிதுந்நபவியைத் தரிசிக்கும் நோக்கில் பிரயாணிக்கட்டும். பின்பு அங்கு வந்தபின் அவர்களுடைய சமாதியையும் தரிசிக்கலாம்.

12. நபியவர்களின் சமாதிச் சுவரைத் தொடுவது, முத்தமிடுவது, அதனை வைத்து பரகத் தேடுவது, மார்க்கத்தில் இல்லாத கண்டுபிடிக்கப்பட்ட பிரார்த்தனைகளை அவ்விடத்தில் ஓதுவது, அல்லாஹ்விடம் பிரார்த்திக்கும் போது கப்ரை முன்னோக்குவது போன்ற செயல்கள் (தடைசெய்யப்பட்டவையே). அவற்றைவிடக் கொடுமையானது நபியவர்களைக் கொண்டு பாதுகாப்புத் தேடுவதும், தனது தேவைகளை அவர்களிடத்தில் கேட்பதுமாகும். இது பெரிய இணைவைப்பாகும்.

எல்லாப்புகழும் இறைவனுக்கே!

ஹஜ், உம்ராவில் விடப்படும் கொள்கைத் தவறுகள் என்ற நூலிலிருந்து சுருக்கப்பட்டது.

ஆக்கம் : கலாநிதி அஹ்மத் அல்மிஸ்யத்

தமிழில்

M. அஹ்மத் (அப்பாஸி)